மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 145/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கோபாலன் | நாள் | 30.01.2025 |
| தகப்பனார் பெயர் | மன்னாதன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

11) இ.ம.எண்.1/2022 என்ற மனுவில் சொல்லப்பட்டுள்ள உத்தரவுப்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது என குறிப்பிட்டுள்ள போதிலும் மேற்படி ஆவணம் குறித்து, பொய்யாக சாட்சியம் அளிக்க வாதி என்னிடம் பணிந்துள்ளார் என்றால், சரியல்ல. மேற்படி ஆவணம் மோசடியானது என கடந்த 16.12.2024 ம் தேதிய குறுக்கு விசாரணையில் பிரதிவாதிகள் தரப்பில் என்னிடம் சொல்லப்பட்டுள்ள நிலையில், பின்னிட்டு அதை பற்றி நான் இன்றுவரை வாதியிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை.

12) ச.எண்.351/1F யாருக்கு சொந்தமானது என்பது குறித்தும், அதை யார் யாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி இ.ம.எண்.1/2022 ல் என மோசடியானது என தீர்மானிக்கப்பட்ட, நான் சாட்சி கையெழுத்திட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. தாவா சர்வே எண்ணில் எனக்கு வீடு ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை.

13) என் முதல் பிரமாண சாட்சிய வாக்குமூலத்தின் 2 வது பக்கத்தில் 4 வது பத்தியில் 10 வது வரியில் நான் கட்டியுள்ள வீட்டிற்கு நடந்து செல்லவும் மகசூல்களை வண்டி வாகனம் மூலம் எடுத்து செல்லவும் பொதுப்பாதையை அனைவரும் அறிய அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான். அதேபோல் 5 வது பத்தியில் 4 வது வரியில், எனது வீட்டிற்கு நடந்து செல்லவும் வாகனம் மூலம் எடுத்து செல்லவும் பாதை தேவைப்படுகிறது என சொல்லியுள்ள நிலையில் தாவா சர்வே எண்ணில் எனக்கு வீடு எதுவும் இல்லை என்றால், சரிதான். அவ்வாறு என்னுடைய வீட்டிற்கு

தேவைப்படுகிறது என நான் சொல்லியிருந்தேன் என்றால், அது தவறானது என்றால், சரிதான்.

14) வாதிக்கு என்னென்ன சர்வே எண்ணில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என எனக்கு தெரியாது என்றால், சரிதான். அது குறித்து நான் என் முதல் விசாரணை சாட்சியத்தில் எதுவும் சொல்லவில்லை என்றால், சரிதான். வாதி இவ்வழக்கில் என்ன சக்குபந்தி விரவம் குறிப்பிட்டுள்ளார் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. பிரதிவாதிகளின் நிலம் என்ன சக்குபந்தியில் உள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

15) என் முதல் பிரமாண சாட்சிய வாக்குமூலத்தில் பொதுத்தடம் என சொல்லியுள்ள நிலையில் ஊர் மக்கள் அதை பயன்படுத்துகிறார்களா என்றால், இல்லை. வாதி தான் பயன்படுத்துகிறார். மேற்படி பொது வழித்தடம் குறித்து இவ்வழக்கில் பிரதிவாதிகள் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வாதிக்கு அவர் தந்தை எழுதிக்கொடுத்த பாகபிரிவினை ஆவணம் மற்றும் கிரய ஆவணத்தில் தாவா வழித்தடம் பற்றி எழுதப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி தாவா வழித்தடம் நிலையில் இருந்திருந்தால் அது குறித்து வாதியின் தந்தை அளித்துள்ள பாகபிரிவினை மற்றும் கிரய ஆவணங்களிலேயே சொல்லப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு இல்லாததால்தான் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

16) வாதிக்கு தாவா தடவழியில் எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தனக்கு இல்லாத வழித்தட உரிமையை காண்பிக்க ஒரு மோசடி ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலம் தனக்கு உரிமையுள்ளதாக காண்பிக்க இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றாலும், மேற்படி ஆவணம் மோசடியானது என இந்நீதிமன்றத்தால், தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் சாட்சி கையெழுத்திட்டுள்ள எனது சாட்சியமும் ஏற்கத்தக்கதல்ல என்றாலும், எந்த காலத்திலும் வாதி தாவா தடவழியை பயன்படுத்தியதில்லை என்றாலும், மேற்படி பிரதிவாதிகளால் தங்களது தேவைக்காக

அமைக்கப்பட்ட வழித்தடத்தை வாதி மோசடி ஆவணம் மூலம் அபகரிக்க முயற்சிக்கிறார் என்றாலும், சரியல்ல.

17) ச.எண்.351/1 என்பது எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. ச.எண்.351/1F யார் பெயரில் உள்ளது, ச.எண்.351/1F2 யார் பெயரில் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால், சரிதான். 1, 2 பிரதிவாதிகள் வண்டி வாகனங்கள் செல்லக்கூடாது என்று தடுக்கிறார்கள் என நான் சொல்லியுள்ளது தவறானது என்றாலும், சரியல்ல. வாதிக்கு மேற்படி தடவழியில் உரிமையே இல்லாத நிலையில், மேற்படி தடவழியை 1, 2 பிரதிவாதிகள் தடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல.

18) 3ம் பிரதிவாதி கண்ணப்பநாயுடு வட்டி தொழில் செய்து வந்தார் என்றால், சரிதான். அவருடன் நான் வரவு, செலவு செய்து வந்தேன் என்றால், சரிதான். நான் ஆவணங்கள் ஏதேனும் எழுதி கடன் பெறுவேனா என்றால், இல்லை. கைமாத்தாக தான் வாங்குவேன். நான் சொல்வது தவறானது என்றாலும், நான் வரவு செலவு தொடர்பாக 3ம் பிரதிவாதியிடம் எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு வாதியின் வசம் உள்ளதால், வாதி என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி கடனை தவிர்க்கும் பொருட்டு வாதிக்கு ஆதரவாக மோசடியான ஆவணத்தை ஏற்படுத்தி அதனை அனுசரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.